**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், பொள்ளாச்சி</u>**

<u>முன்னிலை : திருமதி.R.சுஜாதா, B.Sc., L.L.M.,</u>

**<u>முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி, பொள்ளாச்சி</u>**

<u>2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் திங்கள்கிழமை</u>

**2057 திருவள்ளுவர் ஆண்டு விசுவாவசு வருடம் பங்குனி திங்கள் 02 ம் நாள்**

**<u>அ.வ.எண்.369/2021</u>**

**<u>TNCB-13000447-2021</u>**

1) திருமதி, சந்திரலேகா

2) திருமதி. மேனகா

3) தாரணி --- வாதிகள்

/ எதிர் /

1) நித்யசரண்

2) திரு. வட்டாட்சிர் அவர்கள், ஆனைமலை

3) திரு. மாவட்ட ஆட்சியாளர் அவர்கள், கோயமுத்தூர்

4) திருமதி. ஜெயந்தி .... பிரதிவாதிகள்

(இ.ம.எண். 3/2021 நாள் 21.02.2023)

இவ்வழக்கனாது, கடந்த 17.12.2021 ம் தேதியன்று தாக்கல் செய்யப்பட்டு, 21.12.2021 அன்று கோப்பிற்கு எடுக்கப்பட்டு 11.02.2026 தேதியன்று இறுதி விசாரணைக்கு உட்படுத்தப்பட்டு, வாதிகள் தரப்பில் வழக்கறிஞர் திருS.ரவிச்சந்திரன் அவர்கள் முன்னிலையாகியும், 1 மற்றும் 4 பிரதிவாதிகதள் தரப்பில் வழக்கறிஞர் P.ரவி அவர்கள்

முன்னிலையாகியும், பிரதிவாதிகள் 2 மற்றும் 3 தோன்றாத்தரப்பினராக்கப்பட்டும், இருதரப்பு வழக்கறிஞர்களின் வாதுரைகளை கேட்டும், இதுநாள் வரையில் எனது கவனமான பரிசீலனையில் இருந்து வரும் வழக்காவணங்களை பரிசீலித்தும், இன்று இந்நீதிமன்றம் வழங்கும்...

## <u>தீர்ப்புரை</u>

கடந்த 26.05.2021 தேதியில் இறந்து போன டாக்டர், பழனிச்சாமி அவர்களுக்கு இந்த வாதிகளும் 1 முதல் 3 வாதிகளும், 1ம் பிரதிவாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கிட கோரி உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை VII, விதி 1-ன்படி இவ்வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2) <u>வழக்குரையின் சுருக்கம்</u>:**

1ம் வாதி 3 ம் வாதியின் தாயார் ஆவார், 2 ம் வாதி 3 ம் வாதியின் சகோதரி ஆவார். 2, 3 ம் வாதிகளின் தகப்பனாரான Dr. பழனிச்சாமி கடந்த 26.05.2021 ம் தேதி பொள்ளாச்சி டவுன், J.P. மருத்துவமனையில் வைத்து கொரோனா நோய் தொற்று காரணமாக இறந்துவிட்டார். 3 ம் வாதியின் தகப்பனார் Dr. பழனிச்சாமிக்கு 1ம் வாதியான 3ம் வாதியின் தாயார் முதல் மனைவி ஆவார். 2 ம் மனைவி 4 ம் பிரதிவாதி ஆவார். 4 ம் பிரதிவாதி 3 ம் வாதியின் தாயார் உயிருடன் இருக்கும் போதே 3 ம் வாதியின் தாயாரிடமிருந்து விவாகரத்து எதுவும் பெறாமல் இரண்டாவதாக 4 ம் பிரதிவாதியை 3 ம் வாதி தகப்பனார் Dr.பழனிச்சாமி திருமணம் செய்து கொண்டதால் 4ம் பிரதிவாதி 3ம் வாதியின் தகப்பனாருக்கு சட்டப்படியான வாரிசல்ல. அதனால் இறந்து போன 3ம் வாதியின் தகப்பனார் Dr. பழனிச்சாமிக்கு3 ம் வாதியும், 1,2 வாதிகளும் மற்றும் 1 ம் பிரதிவாதியும் தான் சட்டப்படியான வாரிசுகளாவார்கள்.

(2.2) மேலும் 3ம் வாதியின் தகப்பனார் Dr.பழனிச்சாமி அரசு மருத்துவராக இருந்து கொரோனா நோய் தொற்றால் காலமாகிவிட்டதால் அரசு தரும் உதவிகளை பெற வாதிகளுக்கு வாரிசு சான்றிதழ் தேவைப்படுகிறது. 1ம் வாதி 2ம் பிரதிவாதி அலுவலகத்தில் 3 ம் வாதியின் தகப்பனார் Dr.பழனிச்சாமியின் வாரிசு சான்றிதழ் வேண்டி மனுத்தாக்கல் செய்த போது காலம் சென்ற 3ம் வாதியின் தகப்பனார் Dr.பழனிச்சாமிக்கு இரண்டு மனைவிகள் என்பதால் நீதிமன்றம் மூலம் பரிகாரம் தேடிக் கொள்ள அறிவுறுத்தி 2ம் பிரதிவாதி குறிப்பாணை வழங்கினார். அந்த குறிப்பாணையின் வாயிலாக வாரிசு சான்று கோரி இந்த தாவாவினை சமூகம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளார்கள். மேற்படி 2ம் பிரதிவாதிக்கு 3ம் பிரதிவாதி உயர்அதிகாரி ஆவார். அவரைப் பொருத்து எவ்வித பரிகாரமும் கோரவில்லை. (2.3) எனவே இறந்து போன 3ம் வாதியின் தகப்பனாரான Dr. பழனிச்சாமி அவர்களுக்கு 3ம் வாதியும், 1. 2 வாதிகளும், 1ம் பிரதிவாதியும் தான் சட்டப்படியான வாரிசுகள் ஆவார்கள். ஆகவே சமூகம் கோர்ட்டாரவர்கள் கிருபை செய்து 3ம் வாதியின் தகப்பனாரான Dr. பழனிச்சாமி அவர்களுக்கு 3ம் வாதியும் , 1, 2 வாதிகளும், 1ம் பிரதிவாதியும் தான் சட்டப்படியான வாரிசுகள் என விளம்புகை செய்யும்படி இந்த தாவா தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3) **1 மற்றும் 4 பிரதிவாதிகளால் தாக்கல் செய்யப்பட்டு எதிர்வழக்குரையின் சுருக்கம் :**

வாதி தாக்கல் செய்துள்ள வழக்கு பொய்யும் மோசடியுமானது. சட்டப்படியும். நியாயப்படியும் நிலைத்தக்கது அல்ல. வாதி தாக்கல் செய்துள்ள வழக்கில் சொல்லியுள்ள சங்கதிகளில் இந்த பிரதிவாதி வெளிப்படையாக ஏற்றுக் கொண்டவைகளைத் தவிர

மற்றவற்றை இந்த பிரதிவாதி மறுக்கிறார். மறுக்கும் அந்த சங்கதிகளை வாதியே நிரூபிக்க வேண்டும். கடந்த 26.5.2021ம் தேதி இறந்து போன டாக்டர் பழனிச்சாமி அவர்களுக்கு வாதிகளும் 1ம் பிரதிவாதியான 4ம் பிரதிவாதியின் மகன் மட்டுமே சட்டப்படியான வாரிசுதாரர்கள் என்று ஊர்ஜிதம் செய்து உத்திரவிடுமாறும், இன்ன பிற பரிகாரங்களும் கோரி இந்த தாவாவை வாதிகள் தாக்கல் செய்துள்ளார்.

(3.2) தாவா 1ம் வாதி டாக்டர் பழனிச்சாமியின் முதல் மனைவி ஆவார். 2 மற்றும் 3 வாதிகள் டாக்டர் பழனிச்சாமியின் முதல் மனைவிக்கு பிறந்த மகள்கள் ஆவர். 1ம் பிரதிவாதியின் தாயார் ஜெயந்தி டாக்டர் பழனிச்சாமியின் இரண்டாம் மனைவி ஆவார். 4 ம் பிரதிவாதி ஜெயந்தி மற்றும் பழனிச்சாமிக்கு பிறந்த ஒரே மகன் 1ம் பிரதிவாதி ஆவார். இந்த தாவாவை தாக்கல் செய்தபோது வாதிகள் 1ம் பிரதிவாதியின் தாயார் ஜெயந்தியை கட்சி சேர்க்காமல் பின்னிட்டு 1ம் பிரதிவாதியின் தாயார் இறந்துபோன டாக்டர் பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசு என்ற உரிமையில் தாமாக வந்து இந்த தாவாவில் கட்சி சேர்க்கக்கோரி மனு தாக்கல் செய்தபின்னிட்டு 4ம் பிரதிவாதியான 1ம் பிரதிவாதியின் தாயார் இந்த தாவாவில் கட்சிசேர்க்கப்பட்டுள்ளார்.

(3.3) 1ம் பிரதிவாதியின் தகப்பனார் டாக்டர் பழனிச்சாமிக்கும் 1ம் பிரதிவாதியின் தாயார் ஜெயந்திக்கும் கடந்த 3.11.2000 தேதியில் திருமணம் நடைபெற்றது. 1ம் பிரதிவாதி கடந்த 16.11.2001ம் தேதி பிறந்தார். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் டாக்டர் பழனிச்சாமியும் 1ம் பிரதிவாதியின் தாயாரான 4ம் பிரதிவாதியும் சேர்ந்து கூட்டாக சொத்துக்களை கிரயம் பெற்றுள்ளனர். 1ம் பிரதிவாதி பிறந்தது முதலே பிரதிவாதியின் தகப்பனார் டாக்டர் பழனிச்சாமியும் 1ம் பிரதிவாதியின் தாயாரான 4ம் பிரதிவாதியும் சேர்ந்து வாழ்ந்து வந்தார்கள்.

இதற்கு சான்றாக 1ம் பிரதிவாதியின் ஆதார் நகல், 1ம் பிரதிவாதியின் தகப்பனாரின் ஆதார் நகல், 1ம் பிரதிவாதியின் தாயாரின் ஆதார் நகல் ஆகயவற்றை இத்துடன் தாக்கல் செய்துள்ளார்கள். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் டாக்டர் பழனிச்சாமி இறக்கும் வரை 1ம் பிரதிவாதியுடன் 4 ம் பிரதிவாதியுடனும் தான் வாழ்ந்து வந்தார். 1ம் பிரதிவாதியின் தகப்பனார் 1ம் பிரதிவாதியின் தாயாரான 4 ம் பிரதிவாதியின் பெயரில் கிளினிக் வைத்து நடத்தி வந்தார்.

(3.3) தமிழக அரசின் "Contributory Pension Scheme (CPS)கணக்கில் 1ம் பிரதிவாதியின் தாயாரான 4 ம் பிரதிவாதியின் பெயரையே 1ம் பிரதிவாதியின் தகப்பனார் டாக்டர் பழனிச்சாமி தனது மனைவி என பதிந்துள்ளார். இவ்வாறிருக்க 1ம் பிரதிவாதியின் தாயாரும் 1ம் பிரதிவாதியும் 1ம் பிரதிவாதியின் தகப்பனார் டாக்டர் பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசுதாரர்கள் ஆவார்கள். 1ம் **பிரதிவாதியின்தகப்பனார்** இறந்தபின்னிட்டு அவரது வாரிசுகளான 1ம் பிரதிவாதிக்கும் 4 ம் பிரதிவாதிக்கும் அனைத்து சலுகைகளும் கிடைக்கத்தக்கதாகும். எனவே வாதிகளுடன் சேர்ந்து 1ம் பிரதிவாதியும் 4 ம் பிரதிவாதியும் இறந்துபோன டாக்டர் பழனிச்சாமியின் வாரிசுகள் ஆவார்கள். எனவே வாதிகளுடன் சேர்த்து 1ம் பிரதிவாதியும் 4 ம் பிரதிவாதியும் இறந்துபோன டாக்டர் பழனிச்சாமியின் வாரிகள் என்று விளம்புகை செய்து உத்திரவிடுமாறு பிராத்திக்கிறார்.

**4) <u>வழக்கெழுவினாக்கள்</u>** :

வழக்குரை மற்றும் எதிர்வழக்குரை சங்கதிகளின் அடிப்படையில் இரு தரப்பும் கேட்கப்பட்டு, இவ்வழக்கின் தீர்விற்காக கீழ்க்கண்ட எழுவினாக்கள் வனையப்பட்டுள்ளது.

| | |
|---|---|
| 1. | Whether the plaintiff and D1 alone are the legal legal heirs of the deceased Palanisamy ? |
| 2 | Whether the plaintiffs is entitled for the relief of declaration |

| | |
|---|---|
| | as prayed for ? |
| 2. | To what other relief? |

**5) <u>சாட்சிகள்</u> :**

வாதிகள் தரப்பில், 3ம் வாதி தாரணி தன்னை **வா.சா.1** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.1** முதல் **வா.சா.ஆ.5** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 3ம் நபர் ஸ்ரீகாந்த் வாதி தரப்பில் **வா.சா.2** ஆக விசாரித்துக்கொண்டு **வா.சா.ஆ.6** வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளது. **பிரதி**வாதிகள் தரப்பில், 1ம் பிரதிவாதி நித்தியசரண் தன்னை பி**.வா.சா.1** ஆக விசாரித்துக்கொண்டு பி**.வா.சா.ஆ.1** முதல் பி**.வா.சா.ஆ.4** வரையிலான சான்றாவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. 4ம் பிரதிவாதி ஜெயந்தி தரப்பில் பி**.வா.சா.2** ஆக விசாரித்துக்கொண்டு பி**.வா.சா.ஆ.5 முதல் பி.வா.சா.ஆ.10** வரையிலான சான்றாவணங்களை குறியீடு செய்யப்பட்டுள்ளது.

6) இருதரப்பும் கேட்டக்கப்பட்டது . ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டன.

**7) <u>எழுவினாகள் 1-2 ற்கான தீர்வு</u>:**

வாதிகள் அவரது தந்தை பழனிச்சாமி இறப்பிற்கு வாரிசு சான்றிதழ் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளதை வாதிகள் நிரூபித்துள்ளார்களா என்று காண்கையில் பழனிச்சாமி கடந்த 26.05.2021 தேதியன்று பொள்ளாச்சி டவுன், JP மருத்துவமனையில் வைத்து காலமாகிவிட்டார் என்பது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.1** பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. மேற்படி இறந்துபோன பழனிச்சாமி அவர்களுக்கு1 முதல் 3 வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி சட்டப்படியான

வாரிசுகள் ஆவார்கள். மேற்படி இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின் முதல் மனைவி 1ம் வாதி சந்திரலேகா ஆவார். மேற்படி சந்திரலோகாவிற்கும் இறந்துபோன டாக்டர். பழனிச்சாமிக்கும் பிறந்த பெண்மக்கள் 2 மற்றும் 3 வாதிகள் ஆவார்கள். 1ம் வாதி உயிருடன் இருக்கும் பொழுதே 4ம் பிரதிவாதியை டாக்டர்.பழனிச்சாமி 2வது திருமணம் செய்து கொண்டார் என்பது இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.

(7.2) மேற்படி 4ம் பிரதிவாதிக்கும் இறந்துபோன டாக்டர்.பழனிச்சாமிக்கும் பிறந்த மகன் தான் 1ம் பிரதிவாதி என்பது இருதரப்பாலும் ஏற்றுக்கொள்ளப்பட்ட சங்கதியாகும்.மேற்படி இறந்துபோன டாக்டர்.பழனிச்சாமியின் வாரிசு சான்றிதழ் கேட்டு 2ம் பிரதிவாதியிடம் 1ம் வாதி மனு கொடுத்த போது 2ம் பிரதிவாதி இறந்துபோன டாக்டர். பழனிச்சாமிக்கு ஒன்றுக்கும் மேற்பட்ட மனைவிகள் இருப்பதால் நீதிமன்றத்தின் மூலம் பரிகாரம் தேடிக்கொள்ளும்படி குறிப்பாணை வழங்கியுள்ளார் என்பது வாதிகள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள **வா.சா.ஆ.5** ஆவணத்தை பரிசீலிக்கையில் உண்மையென உறுதியாகிறது. மேலும் மேற்படி வாதிகளும் 1ம் பிரதிவாதியும் இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின் வாரிசுகள் இல்லை என எவ்வித ஆட்சபணையும் 2 மற்றும் 3 பிரதிவாதிகள் தரப்பில் இல்லை.

(7.3) மேலும் 1மற்றும் 4 பிரதிவாதிகள் அவர்களது எதிர்வழக்குரை மற்றும் முதல் விசாரணை சாட்சியத்தில் 4ம் பிரதிவாதி இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின் 2வது மனைவி என்று ஒப்புக்கொண்டுள்ளனர். ஆனால் 4ம் பிரதிவாதியையும் இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின் சட்டப்படியான வாரிசு என விளம்புகை செய்யும் படி 1 மற்றும் 4 பிரதிவாதிகள் தரப்பில் வாதம் செய்தனர். இந்து வாரிசுரிமைச்சட்டம் பிரிவு 8ன் படி முதல்

மனைவி உயிருடன் இருக்கும் போது 2வது மனைவி சட்டப்படியான வாரிசு என்ற வரையறுக்குள் வரமாட்டார் என்பது மேற்படி சட்டத்தில் தெளிவாக கூறப்பட்டுள்ள நிலையில் 1 மற்றும் 4 பிரதிவாதிகள் 4ம் பிரதிவாதியை இரண்டாவது மனைவி என்று அவர்களே ஒப்புக்கொண்டுள்ள நிலையில் அவர் இறந்துபோன டாக்டர்.பழனிச்சாமிக்கு வாரிசு என்று வரையறுக்குள் வரமாட்டார் என்பது உறுதியாகிறது.

(7.4) மேலும் இந்த வாதிகள் இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின் வாரிசுகள் இல்லை என்று இந்த பிரதிவாதிகள் எவ்வித ஆட்சேபணையும் செய்யாமல் ஒன்றுக்கு மேற்பட்ட மனைவிகள் உள்ளதாக கூறி குறிப்பாணை வழங்கியதில் இருந்தே வாதிகள் மற்றும் 1ம் பிரதிவாதி இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின் முதல் நிலை வாரிசுகள் என்பது உறுதியாகிறது. வாதிகள் தரப்பை உறுதிபடுத்தும் விதமாக 3ம் நபர் ஸ்ரீகாந்த் வா.சா.2 ஆக விசாரிக்கப்பட்டுள்ள நிலையில் அவர்கள் வாதிகள் தரப்பை மேலும் வலுப்படுத்தி சாட்சியமளித்துள்ளார். மேற்படி வாதிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி மற்றும் சான்றாவணங்களிலிருந்து வாதிகள் இறந்துபோன டாக்டர். பழனிச்சாமியின்சட்டப்படியான முதல் நிலை வாரிசுகள் என்பது உறுதியாகிறது என இந்நீதிமன்றம் முடிவு செய்து மேற்கண்ட எழுவினாக்களுக்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு காண்கிறது.

**8) <u>எழுவினா 3 ற்கான தீர்வு</u>:**

மேற்கண்ட எழுவினாவிற்கு வாதிகளுக்கு ஆதரவாக தீர்வு கண்டுள்ளதால் வேறெந்த பரிகாரமும் வாதிகளுக்கு கிடைக்கத்தக்கதென இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது-

**<u>முடிவில்,</u> கடந்த 26.05.2021 தேதியில் இறந்து போன டாக்டர், பழனிச்சாமி அவர்களுக்கு இந்த 1 முதல் 3 வாதிகளும், 1ம் பிரதிவாதி மட்டுமே சட்டப்பூர்வமான வாரிசுகள் என்று விளம்புகை பரிகாரம் வழங்கி தீர்ப்பளிக்கப்படுகிறது. செலவுத்தொகை இல்லை.**

இத்தீர்ப்புரை, என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்டு, 2026 ஆம் ஆண்டு மார்ச் திங்கள் 16 ஆம் நாள் இந்நீதிமன்றத்தில், என்னால் அவையறிய பகரப்பட்டது.

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.03.12 18:49:14 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

**<u>வாதிகள் தரப்பு சாட்சி</u>** :

வா.சா.1. தாரணி (வாதி)

வா.சா.2 ஸ்ரீகாந்த் (3 ம் நபர்)

**<u>வாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல்</u>** :

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.1 | 14.06.2021 | பழனிச்சாமி இறப்பு சான்றிதழ் - சான்றிட்ட நகல் |
| வா.சா.ஆ.2 | | 1ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிற ஒளிநகல் |

| | | |
|---|---|---|
| வா.சா.ஆ.3 | | 2ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிற ஒளிநகல் |
| வா.சா.ஆ.4 | | 3ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்படுகிற ஒளிநகல் |
| வா.சா.ஆ.5 | | 2ம் பிரதிவாதி வழங்கிய குறிப்பாணை அசல் |
| வா.சா.ஆ.6 | | தாரணி ஆதார் அட்டை (அசலுடன் ஒப்பீடு செய்யப்பட்டது |

**<u>பிரதிவாதிகள் தரப்பு சாட்சி :</u>**

பி.வா.சா.1. நித்தியசரண் (பிரதி வாதி)

பி.வா.சா.2 ஜெயந்தி (3ம் நபர்)

**<u>பிரதிவாதிகள் தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள் பட்டியல் :</u>**

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.1 | 19.02.2007 | தமிழக அரசு தகவல் மையம் வழங்கிய CPS கணக்கு குறிப்பு - இணையவழி நகல் |
| பி.வா.சா.ஆ.2 | | டாக்டர். பழனிச்சாமியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது நகல் |
| பி.வா.சா.ஆ.3 | | 2ம் பிரதிவாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது நகல் |
| பி.வா.சா.ஆ.4 | | 4ம் வாதியின் ஆதார் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது நகல் |
| பி.வா.சா.ஆ.5 | | டாக்டர். பழனிச்சாமியின் ஓட்டுநர் உரிமம் அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது நகல் |

| | | |
|---|---|---|
| பி.வா.சா.ஆ.6 | | டாக்டர். பழனிச்சாமியின் வாக்காளர் அடையாள அட்டை அசலுடன் சரிபார்க்கப்பட்டு குறியீடு செய்யப்பட்டது நகல் |
| பி.வா.சா.ஆ.7 | 09.01.2009 | 4 ம் பிரதிவாதியும் பொன்ராம் என்பவரும் பெற்ற கூட்டுகிரயம் பத்திர எண்.74/2009 – சான்றிட்ட நகல் |
| பி.வா.சா.ஆ.8 | 12.02.2020 | டாக்டர். பழனிச்சாமிக்குபொன்ராம் எழுதிய செட்டில்மெண்ட் பத்திர எண்.613/2020- சான்றிட்டநகல் |
| பி.வா.சா.ஆ.9 | 28.05.2020 | 4 ம் பிரதிவாதியும் அவரது கணவர் டாக்டர் பழனிச்சாமியும் பெற்ற கூட்டு கிரயம் பத்திர எண்.1483/2020 -சான்றிட்ட நகல் |
| பி. வா.சா.ஆ.10 | | புகைபடங்கள் (8 எண்ணிக்கை ) மற்றும் சி டி - அசல் |

RAMACHANDRAN SUJATHA

Digitally signed by RAMACHANDRAN SUJATHA
Date: 2026.03.12 18:49:21 +0700

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிபதி,

பொள்ளாச்சி.

---------------------------------------------------------

**<u>அசல் / வரைவு தீர்ப்புரை</u>**

அ.வ.எண்.369/2021

நாள் : 16.03.2026

முதன்மை மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,

பொள்ளாச்சி.

---------------------------------------------------------